**வடகிழக்குப் பருவமழை -2015 காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் முன்னேற்பாடு கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு.கே.விவேகானந்தன், இ.அ.ப.,**

**நக. 8165/2015 (பே.மே)** நாள்: 22.09.2015

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 21.09.2015 அன்று பிற்பகல் 04.30 மணியளவில் எதிர்வரும் வடகிழக்குப் பருவமழை காலத்தில் எடுக்கப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்த மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் தருமபுரி மாவட்ட ஆட்சியர் அவர்களால் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் கீழ்க்கண்ட துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

1. மாவட்ட வருவாய் அலுவலர், தருமபுரி.
2. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)
3. வருவாய்க் கோட்ட அலுவலர், தருமபுரி / அரூர்
4. மாவட்ட வழங்கல் அலுவலர், தருமபுரி
5. இணைப்பதிவாளர், கூட்டுறவுச் சங்கங்கள், தருமபுரி
6. கோட்ட தீயணைப்பு அலுவலர், தருமபுரி
7. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), தருமபுரி
8. இணை இயக்குநர், மருத்துவம், தருமபுரி.
9. செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார அமைப்பு, தருமபுரி
10. துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், தருமபுரி
11. உதவி பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், தருமபுரி
12. கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைகள், தருமபுரி
13. இணை இயக்குநர், வேளாண்மை, தருமபுரி.
14. துணை இயக்குநர், தோட்டக்கலைத்துறை, தருமபுரி
15. துணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, தருமபுரி

16. முதன்மைக்கல்வி அலுவலர், தருமபுரி
17. உதவி இயக்குநர், மீன்வளத்துறை, தருமபுரி
18. மேலாளர், மாவட்ட தொழில் மையம், தருமபுரி
19. செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தருமபுரி
20. உதவி பொறியாளர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தருமபுரி
21. மருத்துவமனை கண்காணிப்பாளர், அரசு தருமபுரி மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை, தருமபுரி
22. அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள
23. உதவி இயக்குநர், பேரூராட்சிகள், தருமபுரி
24. அனைத்து வட்டாட்சியர்கள்
25. துணைப்பதிவாளர், பொது விநியோகத்திட்டம், தருமபுரி
26. அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்

**1. மாவட்ட பேரிடர் மேலாண்மை திட்டம் குறித்த கையேடு தயாரித்தல் (நேர்முக உதவியாளர்(பொது)**

மாவட்ட பேரிடர் மேலாண்மை திட்டம் 2015 தயாரிக்கப்பட்டுள்ளது. அத்திட்ட வரைவானது மாவட்ட வலைத்தளத்தில் விரைவில் பதிவேற்றப்பட உள்ள விவரம் தெரிவிக்கப்பட்டது.

**2. வட்ட அளவிலான பேரிடர் மேலாண்மை கையேடு தயாரித்தல் (வட்டாட்சியர்கள்)**

அனைத்து வட்டாட்சியர்களும் வட்ட அளவிலான கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. பருவமழை காலங்களின்போது அதிக பாதிப்பு ஏற்படக்கூடிய தாழ்வான பகுதிகள் / சமுதாயக்கூடங்கள்/ திருமண மண்டபங்கள்/ பள்ளிகள், மகளீர் சுயஉதவிக்குழு விவரங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் வருவாய்த்துறை கள அலுவலர்களின் (வட்டாட்சியர்கள் முதல் கிராம உதவியாளர்கள் வரை) தொடர்பு எண்கள் (தொலைபேசி/ கைப்பேசி), பஞ்சாயத்து செயலர்கள் கைபேசி எண்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய கையேட்டினை தயார்செய்து வைத்துக்கொள்ளுமாறும், போதுமான அளவில் கையேடுகளை தயாரித்து அவற்றை ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர்களுக்கும் இவ்வலுவலகத்திற்கும் அனுப்பிவைக்க கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

**3. கோட்ட/வட்ட/வட்டார அளவில் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடத்துதல்: (வருவாய் கோட்ட அலுவலர்)**

வடகிழக்கு பருவமழை காலங்களின்போது மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்து கோட்ட / வட்ட / வட்டார அளவிலும் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் நடத்தி அதற்கான அறிக்கையினை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிவைக்கவேண்டும். மேலும் வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியர் அலுவலகத்தில் இயற்கை இடர்பாடுகள் குறித்த தகவல்களை சேகரிக்க 24 மணி நேரமும் சுழற்சி முறையில் பணியாளர்களை நியமனம் செய்து பட்டியலினை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்ப அறிவுறுத்தப்பட்டது.

**4. நான்கு இலக்க தொலைபேசி எண் 1077 (மாவட்ட கட்டுபாட்டு அறை)**

பேரிடர் மேலான்மை மற்றும் பேரிடர் நிவாரணப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளும்வகையில் இயற்கை இடர்பாடுகளை உடனுக்குடன் மாவட்ட நிர்வாகத்திற்கும், அரசிற்கும் தெரியப்படுத்தும் வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட கட்டுபாட்டு மையத்தில் 24 மணிநேரமும் கண்காணிக்கப்படும் கட்டணமில்லா தொலைபேசி எண் 1077 செயல்பட்டு வருகிறது. இதில் 24 x 7 மணி நேரமும் பணியாளர்களை நியமனம் செய்து கட்டுபாட்டு அறை செயல்பட்டு வருகிறது. இதில் இயற்கை இடர்பாடுகள்/தீ விபத்து/மழை சேத விவரம்/சாலை விபத்து போன்ற தகவல்களை வட்டாட்சியர்கள் உடனடியாக தெரிவிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

**5. இயற்கை இடர்பாடுகளின் நிகழ்வுகளை தடுக்க மாதிரி ஒத்திகை: (தீயணைப்புத்துறை)**

பருவமழை காலங்களில் ஏற்படும் நிகழ்வுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு முன்னெச்செரிக்கை மாதிரி ஒத்திகையை (Mock Drill) பொதுமக்கள் கூடும் இடங்களில் நடத்திக்காட்டுமாறு கோட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு அலுவலருக்கு தெரிவிக்கப்பட்டது. மீட்புப்பணியின்போது தேவைப்படும் உபகரணங்களை தேவையான அளவில் இருப்பில் வைத்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

**6. மழைமானிகள் செயல்படும் விதம் மற்றும் தணிக்கை மேற்கொள்ளுதல்: ( வட்டாட்சியர்/ வருவாய் கோட்டாட்சியர்)**

தருமபுரி மாவட்டத்தில் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும், ஒகேனக்கல் வனத்துறையிலும் மற்றும் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள மழை மானிகளில் பதிவாகும் தினசரி மழையளவு விவரம் அரசுக்கு இணையதளத்தின் வாயிலாக அனுப்பப்பட்டு வருகிறது.

மேற்கண்ட மழைமானிகளை கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் தணிக்கை செய்து நல்லமுறையில் செயல்படுகின்றதா என்பது குறித்து அறிக்கையினை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்ப அறிவுறுத்தப்பட்டது.

**7..பள்ளிக்கூட கட்டிடங்கள் / சமுதாயக்கூடங்கள் தணிக்கை ( முதன்மைக்கல்வி அலுவலர்/ ஊராட்சி ஒன்றிய ஆணையர்ளர்கள்)**

பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் மாவட்டத்திலுள்ள புயல்தடுப்பு நிலையங்கள், பள்ளிக்கட்டிடங்கள், சமுதாயக்கூடங்கள், மற்றும் தனியார் திருமண மண்டபங்களை கண்டறிந்து அவைகளில் பருவமழை காலங்களில் பாதிக்கப்பட்டவர்களை தங்க வைக்க ஏதுவாக உள்ளனவா என ஆய்வு மேற்கொள்ள வேண்டியது. அவ்வாறு தங்க வைக்கும் போது குடிநீர், மின்சாரம், கழிப்பிடவசதிகள் போன்ற அடிப்படைவசதிகள் உள்ளனவா என கருத்தில் கொண்டு ஆய்வு செய்யவும், பருவமழைக் காலங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்படும் தாழ்வான இடங்களை கண்டறிந்து அவ்விடங்களிலுள்ள பள்ளிக்கூடங்களின் தலைமையாசிரியரை தொடர்புகொண்டு முன்கூட்டியே அறை சாவிகளை பெற்றுவைத்துக்கொள் வருவாய்த்துறை அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

பருவமழைகாலங்களில் பொதுமக்களின் நலன் கருதி பாதிக்கப்பட்ட நபர்களை தங்க வைக்கும் நிலையில் அனைத்து பள்ளிக்கட்டிடங்கள், கல்லூரிக்கட்டிடங்கள் முதலியவைகளை சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் ஏற்பாடு செய்து உதவிட மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், மற்றும் மாவட்ட கல்வி அலுவலர், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். மழைக்காலங்களில் உடனடி தேவைக்காக பள்ளிக்கட்டிட சாவிகள் கிராமநிர்வாக அலுவலர் வசம் இருக்க தேவையான ஏற்பாடுகள் செய்யுமாறு கல்வித்துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டது.

**8.அணைக்கட்டுகள் மற்றும் ஏரிகளிலிருந்து தண்ணீர் திறந்துவிடும்போது தகவல் தெரிவித்தல்: (பொதுப்பணித்துறை / ஊராட்சி ஒன்றியம்)**

பருவமழைக் காலத்தின்போது நீர்த்தேக்கம் மற்றும் ஏரிகளில் தண்ணீர் நிரம்பும் தருணத்தில் உபரிநீரை வெளியேற்றக்கூடிய சூழ்நிலை வரும்போது அதனை முன்கூட்டியே பொதுமக்களுக்கு தெரிவித்து, தாழ்வான இடங்களில் வசிக்கும் மக்களை மேடான பகுதிக்கு தங்கவைத்திட ஏற்பாடு செய்யுமாறு பொதுப்பணித்துறை (நீ.வ.ஆ.அ.) செயற்பொறியாளர் மற்றும் வட்டாட்சியர்கள் நடவடிக்கை

மேற்கொள்ளவும், வெள்ளம் வரும் இடங்களில் பயன்படுத்த தேவையான மணல்மூட்டைகளை தயார் நிலையில் இருப்பு வைத்திருக்கவும், நீர் நிலைகளில் தண்ணீர் குறித்த தகவல் அவ்வப்போது மாவட்ட கட்டுப்பாட்டு மையத்திற்கு தெரிவிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**9.நீர் நிலைகளில் ஆக்கிரமிப்பு அகற்றுதல் (பொதுப்பணித்துறை / ஊராட்சி ஒன்றியங்கள்)**

பருவமழை பெய்யத் தொடங்கிடுவதற்கு முன்பாகவே அனைத்து அணைக்கட்டுகள்/ ஆறுகள்/ ஏரிகள் / குளங்கள் ஆகிய நீர்நிலைகளிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட பொதுப்பணித்துறை செயற்பொறியாளர்கள் மற்றும் ஊரக வளாச்சித்துறை ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

**10. நீர்நிலைகளை தணிக்கை செய்தல் (பொதுப்பணித்துறை / ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்)**

பொதுப்பணித்துறை மற்றும் ஊராட்சிகளின் கட்டுபாட்டில் உள்ள அணைக்கட்டுகள்/ ஆறுகள்/ ஏரிகள் / குளங்கள் ஆகிய நீர்நிலைகள் கரைப்பகுதிகளை தணிக்கை செய்து நல்ல நிலையில் உள்ளதா என்பதை பொதுப்பணித்துறை செயற்பொறியாளர்கள்/ ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் ஆய்வு செய்யவும், கரை உடைப்பு/சேதம் எதேனும் ஏற்பட்டிருந்தால் அதனை போர்கால அடிப்படையில் சீர் செய்யவும், தணிக்கை அறிக்கையினை புகைப்படத்துடன் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்க அறிவுறுத்தப்பட்டது.

**11. சாலைகளில் விழும் மரங்கள்/மின்கம்பங்கள் அகற்றி போக்குவரத்தை சீர்செய்தல் (நெடுஞ்சாலைத்துறை / மின்சார வாரியம்)**

பருவமழைக் காலங்களின் போது சூறாவளிக்காற்றினால் சாலையோரங்களில் உள்ள மரங்கள் மற்றும் மின்கம்பங்கள் கீழே விழ நேர்ந்தால், அவற்றை உடனுக்குடன் அகற்றிட தேவையான இயந்திரங்களை (புல்டோசர்ஸ், ஜே.சி.பி.) தயார் நிலையில் வைத்திருக்குமாறு நெடுஞ்சாலைத்துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டது.

மின்கம்பங்கள் கீழே விழும்போது உடனடியாக மின்னிணைப்பை துண்டித்து சரிசெய்யப்பட்ட பின்னர் மீண்டும் மின்னிணைப்பை வழங்கிட மின்வாரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், போக்குவரத்து தடைபடும் சமயங்களில் மாற்றுவழியாக போக்குவரத்தை திருப்பிவிட உரிய நடவடிக்கைகளை நெடுஞ்சாலைத்துறை/ காவல்துறையினர் மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

**12. அத்தியாவசியப் பொருட்களை தேவையான அளவு இருப்பு வைத்துக் கொள்ளுதல்**

**(குடிமைப்பொருள் வழங்கல் துறை )**

பருவமழைக் காலங்களில் வெள்ள பாதிப்பு ஏற்படும் கிராமங்களுக்கு அத்தியாவசிய உணவுப்பொருட்களை உடனடியாக வழங்கிடுவதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கிடங்கில்

தேவையான அளவு இருப்பு உள்ளதா என்பதை மண்டல மேலாளர்/ மாவட்ட வழங்கல் அலுவலர் / வட்ட வழங்கல் அலுவலர்கள் ஆகியோர் ஆய்வு செய்து, தேவையான பகுதிகளுக்கு வாகனங்கள் மூலம் அனுப்பிவைக்க உரிய நடவடிக்கைகளை ஆயத்த நிலையில் வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டது.

**13. கிராம சபா நடத்துதல்: (உதவி இயக்குநர் (ஊராட்சிகள்))**

இயற்கை இடர்பாடுகளான வெள்ளம், புயல் தீவிபத்து மற்றும் நிலநடுக்க காலங்களில் கிராம அளவில் பாதுகாத்துக்கொள்ள பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், பருவமழைக்காலங்களில் மழைநீரை சேகரிக்க வீடுகளில் கட்டமைப்பினை ஏற்படுத்திட பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்திட அக்டோபர் -2ம் தேதியில் கிராம சபா கூட்டங்களை நடத்திடவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தக்க நடவடிக்கையினை உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

**14. மருத்துவத்துறை:( இணை இயக்குநர் ( மருத்துவம்)/ துணை இயக்குநர் (சுகாதாரம்))**

பருவமழைக்காலங்களில் பொதுமக்களுக்கு ஏற்படும் **நோய் பாதிப்புகளை** எதிர்கொள்ள தேவைப்படும் போதுமான மருந்துகளும் மற்றும் பிற மருத்துவ உபகரணங்களையும் தயார் நிலையில் வைத்திருக்கவும் நடமாடும் மருத்துவ குழுக்களின் விவரங்கள் தயார் நிலையில் வைத்திருக்கவும் இணை இயக்குநர் (மருத்துவம்) / துணைஇயக்குநர் (சுகாதாரப்பணிகள்) நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

**இயற்கை இடற்பாடுகள் மூலம் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ஐந்து தினங்களுக்குள் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக நிவாரண உதவிகளை வழங்க பிரேத பரிசோதனை அறிக்கை உடனுக்குடன் சம்மந்தபட்ட வட்டாட்சியரிடம் வழங்க துணை இயக்குநர்(மருத்துவம்) மற்றும் மருத்துவ கண்காணிப்பாளர் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.**

**15.கால்நடை பராமரிப்புத்துறை:**

பருவமழைக்கால்களில் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை கவனித்து மருத்துவ பணிகளை மேற்கொள்வதற்கான அனைத்து மருந்து வகைகளையும் தயார் நிலையில் வைத்திருக்கவும் கால்நடை இறப்பு ஏற்படின் அவற்றைப் பரிசோதித்து உடனுக்குடன் அரசின் நிவாரண உதவிகளை வழங்க **பிரேதபரிசோதனை அறிக்கை**யினை இருதினங்களில் வழங்கிட துணை இயக்குநர், (கால்நடைமருத்துவம்) நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

**16. வட்டார நிலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்:( ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்)**

ஊரக கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து நீர்பாசன தொட்டிகள், ஊரணிகள், குளங்கள், திறந்தவெளி கிணறுகள், ஆகியவைகளின் நிலை குறித்த விவரங்களை அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்களும் அவ்வப்போது தகவல்களை மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்க வேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தங்கள் வட்டாரங்களில் அனைத்து ஊராட்சித் தலைவர்கள் கூட்டம் நடத்தி பொதுமக்கள் குடிநீருக்காக பயன்படுத்தும் திறந்தவெளி கிணறுகள், நீர்த்தேக்க தொட்டிகள் ஆகியவற்றில் அளவில் **குளோரின் பவுடர்** கலந்து பாதுகாப்பான குடிநீர் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளவும், கழிவுநீர் தேங்கும் இடங்களில் கொசுமருந்து அடித்து தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், கழிவு நீர் தேங்காதவண்ணம் தெருச்சாலைகளை சீர்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

## 17. மீன்வளத்துறை

வெள்ளப்பெருக்கு காலங்களில் மீட்பு பணிகளுக்கு தேவையான அளவிற்கு படகுகள், கட்டுமரங்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் எனவும், புதியதாக மேற்படி பொருட்களை வாங்க மீன்வளத்துறை இயக்குநருக்கு தேவைப்பட்டியலை அனுப்பிவைத்து பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெற நடவடிக்கை மேற்கொள்ளவும், வெள்ளப்பெருக்கின்போது உதவ நீச்சல் தெரிந்த நபர்களின் (SWIMMERS) விவரப்பட்டியலினை மீன்வளத்துறை உதவி இயக்குநர் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

## 18. பயிர்சேதம் ( வேளாண்மைத்துறை / வருவாய்த்துறை)

இணைஇயக்குநர், வேளாண்மைத்துறை, மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் பருவமழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கில் ஏற்படும் பயிர்சேதம் குறித்த விவரங்களை சேகரித்து உடனடியாக வருவாத்துறை அலுவலர்களுடன் இணைந்து தணிக்கை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட விவாசயிகளுக்கு நிவாரண உதவிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

## 19.அரசுத்துறை வாகனங்களை சரிசெய்து தயார் நிலையில் வைத்திருத்தல்

இயற்கை இன்னல்கள் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் அனைத்து அரசுத்துறை வாகனங்களையும் ஆய்வு செய்து அவைகள் நல்ல நிலையில் இயங்க ஏதுவாக பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு தயார் நிலையில் வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டது.

**20.VHF/HF கருவிகளின் செயல்பாடு**

வருவாய்த்துறை, வளர்ச்சித்துறை மற்றும் மருத்துவத்துறைக்கு வழங்கப்பட்டுள்ள VHF/HF கருவிகளை பழுது ஏதும் இருப்பின் பழுது நீக்கி இயற்கை இன்னல்கள் தொடர்பான பணிகளை மேற்கொள்ள ஏதுவாக 24X7 நேரமும் தகவல் பரிமாறும் வகையில் வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டது.

**பழுது நீக்க தொடர்புக்கு :** Pat & Venky, 58/24,Southwest Bougue Road, T.Nagar, Chennai-17.Ph: 044-24328732, Helpline: 94 44 08 31 87

**21. IDRN வலைதள பதிவேற்றம்**

பேரிடர் மேலாண்மையில் தேவையான ஆதார வளங்களின் இருப்பு குறித்து இவ்வலைதளத்தில் பிரதிமாதம் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. எனவே www.idrn.gov.in என்ற வலைத்தளத்திலிருந்து படிவங்களை பதிவிறக்கம் செய்து பிரதிமாதம் 5-ந்தேதிக்குள் காலமுறை அறிக்கையினை தவறாமல் அனுப்பி வைக்க அறிவுறுத்தப்பட்டது.

## முக்கியமாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை விவரங்களின் தொகுப்பு

மேலும் பருவ மழையினை எதிர்கொள்ளும் வகையில் கீழ்கண்ட முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது.

- தாழ்வான பகுதிகளின் விவரப்பட்டியல், அவரசகால போக்குவரத்து வழித்தடங்கள், போக்குவரத்து ஊர்திகளின் விவரங்கள் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.
- தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகள் பற்றிய விவரப் பட்டியல் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.
- சமுதாயக்கூடங்கள்/ திருமணமண்டபங்கள், பள்ளிகள் பற்றிய விவரப்பட்டியல் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும். மழை வெள்ள காலத்தில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய தேவையான வாகனங்கள், தண்ணீர் டேங்க்குகள், போர்டபிள் ஜெனரேட்டர்கள், டார்ச் லைட்கள், உணவு சமைக்க பாத்திரங்கள், கேஸ் அடுப்புகள், நியாய விலைக்கடைகளில் தேவையான உணவு பொருட்களின் இருப்பு ஆகியன தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.
- சாலையோர மரங்கள் சேதமடைந்தல் மீட்பு பணிக்கு ஜேசிபி, புல்டோசர், மரங்களை வெட்டும் இயந்திரங்கள், போர்டபில் ஜெனரேட்டர்கள், டார்ச் லைட் நல்ல நிலையில் பராமரித்து தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.
- சாலைகளில் மழைநீர் தேங்காவண்ணம் முன்கூட்டியே சீர்படுத்தவேண்டும.

- அணைக்கட்டுகள், ஏரிகளின் கரைப்பகுதியில் தேவையான அளவிற்கு மணல்மூட்டைகளை அடுக்கி தயார் நிலையில் வைக்கவேண்டும்.
- அவசரக்காலங்களில் உதவிக்கு அழைக்க சுயஉதவி குழுக்கள்/ தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பட்டியல், தொலைபேசி எண்கள் பட்டியல் தயார் நிலையில் வைக்கவேண்டும்
- நடமாடும் மருத்துவ குழுக்கள், அவர்களின் தொலைபேசி எண் விவரங்கள் தயார்நிலையில் வைக்கவேண்டும்.
- மழைக்காலம் தொடங்கும்முன்னரே குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் தேங்காவண்ணம் தெருச்சாலைகள் சீர்படுத்த வேண்டும், சாக்கடைகளை சுத்தப்படுத்தி வைக்கவேண்டும், தெருக்களில் கொசு ஒழிப்பு மருந்து அடித்தும் குளோரின் பவுடர் துவியும் நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். மேலும் அனைத்து குடிநீர் கிணறுகள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அனைத்தும் சுத்தப்படுத்தி தேவையான அளவு குளோரின் பவுடர் கலந்து குடிநீர் விநியோகம் செய்யவேண்டும்.
- அனைத்து வீடுகள் மற்றும் அரசு அலுவலகங்கள் அனைத்திலும் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- கிராம அளவில் கிராம நிர்வாகஅலுவலர்/கிராம உதவியாளர்கள் கிராமத்திலேயே தங்கியிருந்து மழை பாதிப்பு விவரங்களை உடனுக்குடன் உயர் அலுவலர்களுக்கு தெரிவித்திட அறிவுறுத்துமாறு வட்டாட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.
- கால்நடைச்சேதம்/ மனித உயிர் சேதத்தின் போது உடனடியாக நிவாரண உதவி வழங்க பிரேத பரிசோதனை அறிக்கை உடனடியாக வழங்கப்படவேண்டும்.
- அவசரத் தேவைகள்/ உதவிகள்/ பேரிடர் கால வீடு/கால்நடை/ மனித உயரிழப்பு/ போக்குவரத்து பாதிப்பு குறித்த சேதங்கள் பற்றிய தகவல்களை மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்க மாவட்ட கட்டுப்பாட்டு மைய இலவச தொலைபேசி எண் 1077-ல் தெரிவிக்கவேண்டும்.

ஒம்/-கே.விவேகானந்தன்,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
தர்மபுரி.